இந்தியா-நியூஸிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

அடுத்த மாதம் அமல்

புது தில்லி, செப். 15: இந்தியா–நியூஸிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அக்டோபர் 19–ஆம் தேதி அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகள் இடையே கடந்த ஏப்ரல் 27–ஆம் தேதி தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமானது. இருதரப்பு பொருள்கள் வர்த்தகம், சேவைகள், முதலீடு ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது. இதன்மூலம் இந்திய ஏற்றுமதிப் பொருள்களுக்கு நியூஸிலாந்து எவ்வித வரியும் விதிக்கப்படாது என்று உறுதியளிக்கப்பட்டது.

செராமிக் பொருள்கள், தரைவிரிப்புகள், பல்வேறு இயந்திரங்கள், வாகன உதிரிபாகங்கள் உள்ளிட்டவை இந்தியாவில் இருந்து நியூஸிலாந்துக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுக்கு இப்போது அதிகபட்சமாக 10 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி நீக்கப்படும் போது, இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு அந்நாட்டில் மிகப்பெரிய வாய்ப்புகள் கிடைக்கும். பிற நாடுகளைவிடக் குறைவான செலவில் அங்கு பொருள்களை அனுப்பி வைக்க முடியும். இந்தியாவில் அடுத்த 15 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர் முதலீடு செய்ய இருப்பதாக நியூஸிலாந்து ஏற்கெனவே அறிவித்துள்ளது.

ரேபிடோ நிறுவனத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம்

புது தில்லி, செப். 15: நேர்மையற்ற வர்த்தக நடவடிக்கைகள், தவறான விளம்பரங்களை வெளியிட்டது உள்ளிட்ட குற்றச்சாட்டில் இணையவழி வாகன சேவை நிறுவனமான ரேபிடோவுக்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ரூ.10 லட்சம் அபராதம் விதித்தது.

வாடகைக் கார் ஓட்டுநர்கள், வாடகைக்கு இருசக்கர வாகன ஓட்டுபவர்களையும் அதற்கான வாடிக்கையாளர்களையும் இணைக்கும் நிறுவனமாக இந்தியாவில் பெரிய அளவில் ரேபிடோ செயல்பட்டு வருகிறது. இதில் சில நிமிடங்களில் சேவை என்பது போன்ற விளம்பரங்கள் தொடங்கி, தேவை அதிகம் இருக்கும்போது கட்டணத்தை மிக அதிகமாக உயர்த்துவது, பயணத்துக்கு முன்பே ஊக்கத்தொகை அளிக்க கோருவது, அதிக பணத்துக்காக வாகனத்தை உறுதி செய்யாமல் காக்கவைப்பது, கூடுதல் பணம் செலுத்தினால் வாகனத்தை உடனடியாக முன்பதிவு செய்வது போன்ற நேர்மையற்ற வர்த்தக நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வந்தன.

இதே சேவையில் இருக்கும் ஓலா, உபேர், நம்ம யாத்ரி உள்ளிட்ட நிறுவனங்களுக்கும் இந்த புகார்கள் அடிப்படையில் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

ரேபிடோ மீதான குற்றச்சாட்டுகள் உறுதியானதை அடுத்து அந்த நிறுவனத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கப்படுவதாக ஆணையம் அறிவித்தது. ரேபிடோ மென்பொருளின் 'அல்கோரிதம்' இந்த ஏமாற்று செயல்முறைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டது உறுதியானது.

ஓலா, உபேர் மீதான குற்றச்சாட்டுகள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும், அவை நிரூபணமானால் அந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தி பூஜையில் பிரதமர்...

புது தில்லியில் உள்ள மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் வீட்டில் விநாயகர் சதுர்த்தி பண்டிகையையொட்டி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பூஜையில் பங்கேற்க வந்த பிரதமர் நரேந்திர மோடி.

ஒரு நாட்டின் ஆதாயத்தைவிட மனிதகுல அமைதியே முக்கியம்

குடியரசு துணைத் தலைவர்

புது தில்லி, செப். 15: ஒரு நாட்டின் தனிப்பட்ட ஆதாயத்தைவிட ஒட்டுமொத்த மனிதகுலத்தின் அமைதியே முக்கியமானது என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மேலும், அமைதி–முன்னேற்றம்–வளமைக்கான உலகளாவிய குரலாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

ரஷியா–உக்ரைன் போர், மேற்காசிய பிரச்னையால் சர்வதேச அளவில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ள சூழலில், குடியரசு துணைத் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வெளியுறவு விவகாரங்களில் மத்திய அரசுடன் நெருங்கிப்பணியாற்றும் சுதந்திரமான ஆலோசனை அமைப்பான 'உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலுக்கு' (ஐசிடபிள்யூஏ) கடந்த 2001–இல் நாடாளுமன்ற சட்டம் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பு என்ற அந்தஸ்து வழங்கப்பட்டதன் 25–ஆம் ஆண்டு விழா, தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த கவுன்சிலின் தலைவர் என்ற முறையில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், துணைத் தலைவர் என்ற முறையில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தியாவின் மிகப் பெரிய சாதனைஃ விழாவில் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசுகையில், 'போர்கள், முரண்பாடுகள் நிறைந்த தற்போதைய உலகச் சூழலுக்கு இடையே தில்லியில் அண்மையில் நடத்தப்பட்ட பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். பிரதமர் மோடியின் தலைமையின்கீழ், பிரிக்ஸ் தலைவர்களின் பிரகடனம் ஒருமனதாக ஏற்கப்பட்டது இந்தியாவின் மிகப் பெரிய சாதனை.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் ராஜீய களம் வியத்தகு முறையில் மாற்றம் கண்டுள்ளது. இப்போது நமது ராஜீய செயல்பாடுகளில் மிகச் சிறப்பான ஈடுபாடும், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையும் பிரதிபலிக்கிறது.

உலகில் எந்தவொரு பிரச்னையும் பொதுவானதாக கருதப்படவேண்டும். உனது பிரச்னை உன்னுடையது; எனது பிரச்னை என்னுடையது என நாடுகள் கூறிவிட முடியாது. எந்தவொரு நாட்டின் தனிப்பட்ட ஆதாயத்தைவிட ஒட்டுமொத்த மனிதகுல அமைதி முக்கியமானது. அமைதி–முன்னேற்றம்–வளமைக்கான உலகளாவிய குரலாக இந்தியா உருவெடுத்துள்ளது' என்றார்.

நாட்டின் சிறப்பான அணுகுமுறைஃ வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பேசுகையில், 'இந்தியா இப்போது மிகப் பரந்த அளவிலான நாடுகள் மற்றும் பிராந்தியங்களுடன் உறவுகளைக் கொண்டுள்ளது; நாட்டின் முன்னுரிமைகள் விரிவடைந்து, உலகளாவியதாக மாறியுள்ளன.

வளைகுடா மற்றும் உக்ரைன் ஆகிய இருபெரும் மோதல்கள் தற்போது நிகழ்ந்து வருகின்றன. இது போன்ற சூழலில், அனைத்துத் தரப்பினருடனும் இந்தியா சிறப்பான உறவுகளைக் கொண்டுள்ளது. இத்தகைய அணுகுமுறையை உருவாக்குவது என்பது எளிதானதல்ல.

புதிய கூட்டாளிகள், புதிய சந்தைகள் மற்றும் புதிய வழித்தடங்கள் நமது ஏற்றுமதியைப் பாதுகாத்து விரிவுபடுத்தியுள்ளன. துடிப்புமிக்க நமது தீர்வுகளால் விநியோகச் சங்கிலிகளும் பலனடைந்துள்ளன' என்றார்.

உலகளாவிய பிரச்னைகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைப்பது, ஐசிடபிள்யூஏ–வின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

சமூக ஊடகங்களில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் பதிவுகள்

நேரடியாக தகவல் தெரிவிக்க மெட்டா ஒப்புதல்

புது தில்லி, செப். 15: சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் பதிவுகள் குறித்து இந்திய இணைய குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தால் நிர்வகிக்கப்படும் இணைய குற்றத் தடுப்பு வலைதளத்தில் நேரடியாகத் தகவல் தெரிவிக்க மெட்டா நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம், மெசஞ்சர், திரெட்ஸ் ஆகிய சமூக ஊடகங்களின் உரிமையாளரான மெட்டா நிறுவனம் அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

சமூக ஊடகங்களில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் மற்றும் இதர தீங்கான உள்ளடக்கங்கள் மீது அதிக பொறுப்புணர்வையும், பாதுகாப்பு அம்சங்களையும் உறுதி செய்ய நிறுவனங்களுக்கு மத்திய அரசு வலியுறுத்திவரும் சூழலில், மெட்டாவின் மேற்கண்ட ஒப்புதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அத்துடன், இந்திய இணைய குற்றத் தடுப்பு வலைதளத்தில் நேரடியாக தகவல் தெரிவிக்க ஒப்புக்கொண்ட முதலாவது பெரிய தொழில்நுட்ப நிறுவனம் மெட்டா ஆகும்.

இதுவரை குழந்தைகள் பாதுகாப்பு தொடர்புடைய தகவல்களை அமெரிக்காவில் செயல்படும் 'மாயமான மற்றும் தவறாகப் பயன்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய மையத்திடம்' மெட்டா தெரிவித்து வந்தது. அந்த மையத்தின் வாயிலாகவே இந்திய முகமைகளுக்கு தகவல் அளிக்கப்படுவது நடைமுறையாக இருந்தது. இனி நேரடியாக இந்திய சட்ட அமலாக்க முகமைக்கு மெட்டா தகவல் தெரிவிக்கும்.

ஒப்புதல் ஏன்?ஃ இது தொடர்பாக அந்த நிறுவன செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், 'சமூக ஊடகங்களில் குழந்தைகளுக்கான பாதுகாப்புக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். குழந்தைகள் தொடர்புடைய குற்றங்களில் ஈடுபடுவோர், தங்கள் செயலுக்குப் பொறுப்பேற்கச் செய்யப்படுவதை உறுதி செய்ய இந்திய அரசுடன் இணைந்து பணியாற்ற உறுதிபூண்டுள்ளோம்.

இத்தகைய குற்றங்களுக்கு எதிரான கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தும் நோக்கில், சம்பந்தப்பட்ட உள்ளடக்கங்கள் குறித்து இந்திய இணைய குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மைய வலைதளத்தில் நேரடியாகத் தகவல் தெரிவிக்கப்படும்' என்றார்.

மத்திய அரசு கடுமைஃ இந்த விவகாரம் குறித்து அரசு வட்டாரங்கள் கூறியதாவது: இந்தியாவில் செயல்படும் அனைத்து சமூக ஊடகங்களிலும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதை மத்திய அரசு அடிப்படை கொள்கையாகக் கொண்டுள்ளது; இணையத்தில் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்கள் மற்றும் சட்டவிரோத செயல்பாடுகளில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதில் சமூக ஊடகங்களுக்கான பொறுப்புணர்வில் மத்திய அரசு கடும் நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது. அத்தகைய உள்ளடக்கங்கள் விரைந்து அடையாளம் காணப்பட்டு, நீக்கப்படுவதை உறுதி செய்வது குறித்து சமூக ஊடகங்களுடன் அரசு தொடர் ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்திய முகமையிடம் மெட்டா நிறுவனம் நேரடியாகத் தகவல் தெரிவிக்கஒப்புக்கொண்டது சமூக ஊடகங்களை குழந்தைகளுக்குப் பாதுகாப்பானதாக மாற்றுவதை நோக்கிய முதல்படியே. இன்னும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்திய சட்டங்களுக்கு இணங்க வேண்டும்ஃ குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல், போலி சித்தரிப்புகள் உள்ளிட்ட சட்டவிரோத உள்ளடக்கங்கள் மீதான பொறுப்புணர்வு மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பாக மெட்டா நிறுவனத்தின் சர்வதேச நிர்வாகிகளை வரவழைத்து மத்திய அரசு தீவிர ஆலோசனை மேற்கொண்டது.

இந்திய சட்டங்களுக்கு இணங்கத் தவறினால், அதை சகித்துக் கொள்ள முடியாது என்றும் அவர்களிடம் எச்சரிக்கப்பட்டது என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, இன்ஸ்டாகிராமில் குழந்தைகள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுவதை ஊக்குவிக்கும் கட்டண விளம்பரங்கள் குறித்து மெட்டா நிறுவனத்துக்கு மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் கடந்த ஜூலையில் நோட்டீஸ் அனுப்பியது. அத்தகைய விளம்பரங்கள் மற்றும் உள்ளடக்கங்களை நீக்கவும் உத்தரவிடப்பட்டது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் இந்திய இணைய குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் வலைதளம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் சிறப்புக் கவனம் செலுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.
பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் – 09.
மண்டல அலுவலகம் : தரைத்தளம், ஜெனித் ஹவுஸ், கேஷவ்ராவ் கத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலஷ்மி, மும்பை – 34. தொ.பே.: 022–39586300. கிளை அலுவலகம்: HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 3, இரண்டாவது தளம், திவ்யா டிரேட் சென்டர், பிருந்தாவன் சாலை, சேலம் – 636016.
இணையத்தளம்: www.hdbfs.com, மின்னஞ்சல் முகவரி: compliance@hdbfs.com

இணைப்பு – IV (சுவாதீன அறிவிப்பு)
பார்க்க விதி 8(1) (அசையா சொத்துகளுக்கானது)

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002) பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3–இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்திய கோரிக்கை அறிவிப்பினைக் கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையைத் தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் அத்தொகையினைச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் / கூட்டுக் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8–இன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களைக் குறிப்பிட்ட நாட்களில் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்துக்களின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்துக்குக் குறிப்பிட்ட தொகையை உரிய நாள் முதலான அதன் எதிர்கால வட்டி, செலவினங்கள், கட்டணங்கள் ஆகியவற்றுடன் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

அட்டவணைச் சொத்தின் கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரர் விவரங்கள், கடன் கணக்கு எண்கள் – UIC எண், நிலுவையிலுள்ள தொகைகள், கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் சுவாதீன விவரம் ஆகியவை பின்வருமாறு: **1. கடன்தாரர், கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயரும் முகவரியும், 2. கடன் கணக்கு எண், 3. ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன் தொகை, 4. கடனீட்டுச் சொத்து விவரங்கள், 5. கோரிக்கை அறிவிப்பு நாள், 6. கோரப்பட்ட தொகை – ரூபாயில், 7. சுவாதீன நாள்**

1. கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள்: 1. S சினிமா D எண் 6 சினிமா நகர், புதிய பேருந்து நிலையம், சேலம்–636009, தமிழ்நாடு; மற்றும் TS எண் 3/3, கதவு எண் 337/1, வாரிடு N, பிளாக் 38, கந்தசாமி நகர், சேலம்–636014; மற்றும் பழைய S.எண் 116/1, 116/2, பகுதி D/S. 337/1, வாரிடு–N, பிளாக்–38, கந்தசாமி நகர், சேலம்–636014; மற்றும் SF எண்: 115/1, 2, 3 & வாரிடு–N, பிளாக்–38, S. எண்: 3/3, SF எண்: 116/1, 2, வாரிடு–N, பிளாக் 38, S.எண் 3/2; மற்றும் கதவு எண் 86, பழைய SF எண் 283/1, 2, மறு–SF எண் 367/29, மனையிட எண் 26, TS.எண் 27, வாரிடு–A1, பிளாக் 34, காமராஜர் நகர், நெசவாளர் காலனி, சேலம்–636014; மற்றும் கதவு எண் 240, பழைய SF 1/15/1, வாரிடு எண் 38, கந்தசாமி நகர், தாடம்பட்டி கிராமம், சேலம்–636014. **2. பாலுப்பிரியா செந்தில்குமார்,** கதவு எண் 337/1, கந்தசாமி புதூர், தாடம்பட்டி அஞ்சல், சேலம்–636009, தமிழ்நாடு. **3. செந்தில்குமார் ராஜேந்திரன்,** கதவு எண் 337/1, கந்தசாமி புதூர், தாதம்பட்டி அஞ்சல், சேலம் – 636014, தமிழ்நாடு. **4. சுகீலா சதியா உடையார்,** கதவு எண் 86, காமராஜ் நகர் காலனி, சேலம் – 636003, தமிழ்நாடு. **5. 7G ஃபிலிம்ஸ்,** கதவு எண் 337/1, கந்தசாமி புதூர், தாதம்பட்டி அஞ்சல், சேலம் – 636014, தமிழ்நாடு. **2.** தனித்துவ அடையாள எண் **(Unique Id Number) 64098323–உடன் இணைக்கப்பட்ட கடன் கணக்கு எண்கள்: 20177189/24922331/32442481/41603237/5532198 4. 3.** அனுமதிக்கப்பட்ட கடன் தொகைகள்: **கடன் எண் 20177189–க்கு ரூ. 10000000/–** (ரூபாய் ஒரு கோடி), **கடன் எண் 24922331–க்கு ரூ. 31,97,411/–** (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று எழாயிரத்து நானூற்று பதினொன்று மட்டும்), **கடன் எண் 32442481–க்கு ரூ. 1,25,00,000/–** (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து லட்சம் மட்டும்), **கடன் எண் 41603237–க்கு ரூ. 53,00,000/–** (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சம் மட்டும்) மற்றும் **கடன் எண் 55321984–க்கு ரூ. 45,00,000/–** (ரூபாய் நாற்பத்து ஐந்து லட்சம் மட்டும்). **4.** கடனீடு குறித்த விவரங்கள் – சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், சேலம் கிழக்கு கூட்டு–1 சார்பதிவாளர் அலுவலகம் (SRO), சேலம் வட்டம், அம்மாபேட்டை கிராமம் ஆகியவற்றில் அமைந்துள்ள சொத்து; பழைய சர்வே எண் 283/1, 2; புதிய மறு–சர்வே எண் 367/29; உட்பிரிவு எண் 293/29. பிளாட் எண் 26–ல், 2200 சதுர அடி நிலம், அதில் உள்ள RCC கட்டிடம் மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகளும் (easement rights) அடங்கிய சொத்து, இதன் எல்லைகள் மற்றும் அளவுகள்: கிழக்கே – பிளாட் எண் 20அ சொத்து; மேற்கே – 30 அடி சாலை மற்றும் பிளாட் எண் 25; தெற்கே – பிளாட் எண் 26B சொத்து; வடக்கே – பிளாட் எண் 26B சொத்து. அளவுகள்: கிழக்கு–மேற்கு வடக்கு பக்கம் 80 அடி, கிழக்கு–மேற்கு தெற்கு பக்கம் 80 அடி, வடக்கு–தெற்கு கிழக்கு பக்கம் 27 ½ அடி, வடக்கு–தெற்கு மேற்கு பக்கம் 27 ½ அடி; மொத்தம் 2200 சதுர அடி. இச்சொத்து காமராஜ் நகர், நெசவாளர் காலனியில் அமைந்துள்ளது. பிணையச் சொத்து விவரம் 2: சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், **சேலம் கிழக்கு இணை–1** சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட சேலம் நகரம், சேலம் மாநகராட்சி, தாதம்பட்டி கிராமம், மிட்டா சர்வே எண் 115/1 (உட்பிரிவு மறுசர்வே மற்றும் செட்டில்மெண்ட் சர்வேயின்படி வார்டு N, பிளாக் 38, T.S. எண் 3.39) ஆகியவற்றில் 1800 சதுர அடி நிலம் மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகளும் அடங்கிய சொத்து. இதன் எல்லைகள்: வடக்கே – ராமநாயக்கர் வகையறாவின் மீதமுள்ள சொத்து; கிழக்கே – மோகன் சொத்து; தெற்கே – 25 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்கு சாலை; மேற்கே – ராமானஜம் சொத்து. அளவுகள்: மேற்கு பக்கம் 30 அடி, தெற்கு பக்கம் 30 அடி, வடக்கு–தெற்கு கிழக்கு பக்கம் 60 அடி, வடக்கு–தெற்கு மேற்கு பக்கம் 60 அடி; மொத்தம் 1800 சதுர அடி. தற்போது மாநகராட்சி மறுசர்வேயின்படி வார்டு AJ, பிளாக் 38, T.S. எண் 4/1A. இச்சொத்து கந்தசாமி தெருவில் அமைந்துள்ளது. **பிணையச் சொத்து விவரம் 3:** சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், சேலம் கிழக்கு இணை–1 சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட சேலம் வட்டம், தாதம்பட்டி கிராமம், மிட்டா சர்வே எண் 115/1, 2, 3 (குற்போதைய மறுசர்வே செட்டில்மெண்ட் வார்டு–N, பிளாக் 38, T.S. எண் 3/39) ஆகியவற்றில் அமைந்துள்ள சொத்து. **3.13 – 1240** சதுர அடி நிலம் மற்றும் அதற்கான இதர பயன்பாட்டு உரிமைகள் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளன: வடக்கு – 25 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்கு சாலை; தெற்கு – ராமபலவன் சொத்து; கிழக்கு – குமாரசாமி சொத்து; மேற்கு – பாலகிருஷ்ணன் சொத்து. அளவுகள்: வடக்கு–தெற்கு (கிழக்கு பக்கம்) 61 அடி, வடக்கு–தெற்கு (மேற்கு பக்கம்) 63 அடி, கிழக்கு–மேற்கு (வடக்கு பக்கம்) 20 அடி, கிழக்கு–மேற்கு (தெற்கு பக்கம்) 20 அடி. மொத்த அளவு 1240 சதுர அடி. இச்சொத்து கந்தசாமி நகரில் அமைந்துள்ளது. **அடமானச் சொத்து விவரம் 4:** சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், சேலம் கிழக்கு கூட்டு–1 சார்பதிவாளர் அலுவலகம் (SRO), சேலம் வட்டம், தாதம்பட்டி கிராமம் ஆகியவற்றில் அமைந்துள்ள சொத்து. பழைய சர்வே எண் 116/1 (புஞ்சை 1.02 ஏக்கர்) மற்றும் 116/2 (புஞ்சை 1.02 ஏக்கர் மற்றும் 0.36 ஏக்கர்) ஆகியவற்றின் தற்போதைய நிலை: பிளாக்–38, T.S. எண் 3/2–ன் ஒரு பகுதி மற்றும் 1508 சதுர அடி நிலம் மற்றும் இதர பயன்பாட்டு உரிமைகள் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளன: வடக்கு – சண்முகம் மற்றும் மல்லிகா சொத்து; தெற்கு – ரத்தினம் சொத்து; கிழக்கு – பவர் ஏஜெண்டின் மீதமுள்ள சொத்து; மேற்கு – கருப்பண்ணன் சொத்து. அளவுகள்: கிழக்கு–மேற்கு 65 அடி, வடக்கு–தெற்கு (கிழக்கு பக்கம்) 24 அடி, வடக்கு–தெற்கு (மேற்கு பக்கம்) 23 ½ அடி. மொத்த அளவு 1508 சதுர அடி. இச்சொத்து கந்தசாமி நகரில் அமைந்துள்ளது. **5. கோரிக்கை அறிவிப்பு தேதி: 18.05.2026. 6.** கோரப்படும் தொகை – **Los.20177189–க்கு ரூ.82,45,535/– (எண்பத்து இரண்டு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து ஐந்நூற்று முப்பத்து ஐந்து ரூபாய் மட்டும்), Los.24922331–க்கு ரூ.26,63,038.70/– (இருபத்து ஆறு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முப்பத்து எட்டு ரூபாயும் எழுபது பைசாவும் மட்டும்), Los.32442481–க்கு ரூ.1,06,89,510.50/– (ஒரு கோடியே ஆறு லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து ஐந்நூற்று பத்து ரூபாயும் ஐம்பது பைசாவும் மட்டும்), Los.41603237–க்கு ரூ.47,06,540.12/– (நாற்பத்து ஏழு லட்சத்து ஆறாயிரத்து ஐந்நூற்று நாற்பது ரூபாயும் பன்னிரண்டு பைசாவும் மட்டும்), Los.55321984–க்கு ரூ.41,91,934.67/– (நாற்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து நான்கு ரூபாயும் அறுபத்து ஏழு பைசாவும் மட்டும்); ஆக மொத்தம் 5 கடன் கணக்குகளுக்கு 13.05.2026 நாள்படி ரூ.3,04,96,558.99/– (மூன்று கோடியே நான்கு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து எட்டு ரூபாயும் தொண்ணூற்று ஒன்பது பைசாவும் மட்டும்)** மற்றும் மற்றும் தொகை திருப்பப் பெறப்படும் நாள் வரையிலானதும் ஒப்பந்த விகிதப்படியானதுமான எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் முதலானவை உட்பட. **7. சுவாதீன நாள்: 15.09.2026.**

நாள் : 15.09.2026
இடம் : சேலம்
ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., சார்பில்

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.
பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் – 09. கிளை அலுவலகம்: M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 3, திவ்யா டிரேடு சென்டர், இரண்டாவது தளம், பிருந்தாவனம் சாலை, சேலம் – 636016.

E–ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பொதுமக்கள் ஆகியோருக்கு) (SARFAESI சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன்படி பின்வரும் சொத்தை "உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் கீழ்க்காணும் கடன் கணக்கில் பேரில் கவாதீனம் செய்துள்ளார்.

விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1. PRP பேக்கேஜிங் ஸ்ரீ செல்லியம்மன் கார் கொட்டகை எண் 1, அப்பனார் கோவில் காடு தர்ஷன் வளாகம், தில்லை நகர் பிரதான சாலை, சின்னதிருப்பதி, சேலம், சேலம், சேலம் – 636008, தமிழ்நாடு. இன்னொரு முகவரி: SF எண் 188, புதிய SF எண்: 191, TS எண்: 28/5, வாரிடு 9, கதவு எண் 16, தில்லை நகர் 4ஆவது குறுக்குத் தெரு, பொன்னம்பேட்டை கிராமம், சேலம் – 636001. 2. L. சிந்தா. 24 குருக்கள் காலனி, M S M காா்ட்டன், சின்னதிருப்பதி, சேலம், சின்னதிருப்பதி, சேலம் – 636008, தமிழ்நாடு. 3. R பிரசாந்த், 24 குருக்கள் காலனி, M S M காா்ட்டன், சின்னதிருப்பதி, சேலம், சின்னதிருப்பதி, சேலம் – 636008, தமிழ்நாடு. கணக்கு எண்: 31957637.

மொத்த நிலுவைத் தொகை : 15.09.2026 நாள்படி ரூ.13045835.48/– (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது மற்றும் பைசா நாற்பத்தெட்டு மட்டும்) அத்துடன் முழுத்தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான மேல் வட்டி / இடைநிகழ் செலவுகள் / செலவினங்கள் உட்பட..

ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்து ஏதேனும் விலைவங்கங்கள் இருப்பின் அவற்றின் விவரங்கள்: **ஏதும் இல்லை**

கடனீட்டுக் சொத்துக்கள் I– இன் விவரங்கள்: இன்றியமைய